

திருமலையில் புலிகள் தாக்கு; விமானப்படை சிப்பாய் பலி!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 17 இதழ் 141
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-7-1994

(திருமலை)

திருகோணமலையில் விடுதலைப்புலிகள் விமானப்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் விமானப்படை சிப்பாய் ஒருவர் பலியானார். பல ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்.

திருகோணமலையிலுள்ள [illegible]க்கும்- வேப்பங்குளத்துக்குமிடையில் நேற்று முன்தினம் காலை 8-40 மணிக்கு ரோந்துசென்ற விமானப்படை அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை

(4ம் பக்கம் பார்க்க)

ஷெல் தாக்குதலில் இரு சிறுமிகள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அண்மையில் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருசிறுமிகள் கொல்லப்பட்டனர்.

முத்துலிங்கம் கருணாநிதி (வயது 05), முத்துலிங்கம் ஜெயசாந்தி (வயது-03) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

தேர்தலில் நிறுத்துவதற்கு வேட்பாளர் தெரிவில் ஐ. தே. க. - சுதந்திரக்கட்சி பெரும் இழுபறி!

கட்சித்தாவலினால் நிலைமை மேலும் பாதிப்பு!!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் இரு முக்கிய அரசியல் கட்சிகளான ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் பெரும் சிக்கலும் இழுபறியும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருகட்சிகளிலும் இடம்பெற்ற கட்சித்தாவல் இந்த நிலையை மேலும் மோசமாக்கியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் [illegible]ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தாக்கல் செய்யப்படவுள்ளன.

தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து கட்சிகளும் இப்போது தகுதியான வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

ஆளும் கட்சியான ஐ. தே. க.வும் ஸ்ரீல சு.கட்சியை உள்ளடக்கிய பொதுசன ஐக்கிய முன்னணியும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் பெரும்

(4ம் பக்கம் பார்க்க)

வேட்பாளர் தெரிவில் அரசியல்கட்சிகள் தீவிரம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பதில் சகல அரசியல் கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது:

வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் 4ம் திகதி முதல் 11ம் திகதி நண்பகல் 12 மணிவரை தாக்கல்செய்யலாம் எனதேர்தல் திணைக்களம் அறி

(2-ம் பக்கம் பார்க்க)

ரீமாவோ தலைமையில் இன்று சு. க. வேட்பாளர் தெரிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க இன்று நாடு திரும்புகிறார். [illegible] மருத்துவ சிகிச்சை பெற்ற அவர் எதிர்வரும் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக இன்று அவசர

(2-ம் பக்கம் பார்க்க)

பொலிஸ் நிலையம் தீப்பிடித்து நாசம்

(வவுனியா)

வவுனியாவில் பொலிஸ் நிலையமொன்று தீப்பிடித்து எரிந்ததில் அங்கிருந்த ஆயுத தளபாடங்கள் யாவும் நாசமாகியுள்ளன

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள [illegible] பொலிஸ்நிலையமே தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்னொழுக்கே இத் தீப்பற்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. உதவி செயலர் சுதந்திரக்கட்சியில் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளராக கடமையாற்றிய அநுரபஸ் நாயக்க தமது ஆதரவாளர்கள் பலருடன் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொண்டார்.

1973-ம் ஆண்டு இவர் ஐ.

(4ம் பக்கம் பார்க்க)

சஜித் ஐ. தே. க. சார்பில் அம்பாறையில் போட்டி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அம்பாறையில் போட்டியிடவுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகரா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளையில்,—

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியையும் திரு சஜித் பிரேமதாசா ஏற்றுக்கொண்டதாக

(4ம்பக்கம் பார்க்க)

வாக்களிப்பு குறித்து தேர்தல் ஆணையாளர் அறிக்கை

(கொழும்பு)

தமது சொந்த இடங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் மற்றுமொரு வாக்களிப்பு நிலையத்தில் தமது வாக்குகளை பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறு தேர்தல்

(4ம் பக்கம் பார்க்க)

சு. க. உறுப்பினர் இராஜினாமா!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த எஸ். எம். குணசேகர நேற்று சுதந்திரக்கட்சியிலிருந்து இராஜினாமா செய்தார்.

சுதந்திரக்கட்சியில் நியமன எம். பி. யாக இவர் முன்னர் [illegible] வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீது தான் அதிருப்தி கொண்ட காரணத்தினாலேயே தான் அதிலிருந்து விலகுவதாகவும் அரசியலிருந்து ஒதுங்கிக் கொள்வதாகவும் திரு. குணசேகர ஏஜென்சி செய்திகளுக்குத் தெரிவித்துள்ளார். —இ

முக்கிய கட்சிகள் சகல மாவட்டங்களிலும் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்த முடிவு செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

வேட்பாளர் தெரிவு இன்று நடைபெறும் என்றும் அக்கட்சிப் பிரமுகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் பொதுசன ஐக்கிய முன்னணியும் நாட்டின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ்

சகலவிதமான மணிக்கூடுகள், ரேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை, ஊரெழு வீதி, சாவகச்சேரி; தலைமையகம்: 284 [illegible] வீதி, (சானலில் - கலிங்கா அருகில்) யாழ்ப்பாணம்.

(ஏ-4183)

அறிவித்தல்

தமிழீழ மாவட்ட
நீதிமன்று
யாழ்ப்பாணம்

வழக்கு இல: விவாகரத்து 89/94

இராமசாமி மனோகரன்
நாராயணன் வீதி
கோண்டாவில் கிழக்கு
— வழக்காளி

மனோகரன் ஜீவநாயகி
சென் செபஸ்தியார் வீதி
கோண்டாவில் கிழக்கு
— எதிராளி

இத்தால் சகலருக்குமறிய மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் வழக்காளிக்கும் குறித்த எதிராளிக்குமிடையே 27-04-1991 ல் நடைபெற்ற பதிவுத்திருமண உறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறு கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். எனவே வழக்காளியின் கோரிக்கையை இம்மன்று பரிசீலிப்பதற்கு எதிராக ஆட்சேபனை ஏதுவும் இருப்பின் இவ்வறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து ஒருமாத காலத்தினுள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட
நீதிமன்று
யாழ்ப்பாணம்.
1994, ஆனி, 27.

(இ-1109)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி நேயர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை சனிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு வழமையான இடத்தில் நடைபெறும். அனைத்து புலிகளின் குரல் நேயர்களையும் ஆர்வலர்களையும் தவறாது வந்துசெல்லும்படி கேட்டுள்ளனர்.

பரீட்சை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை, இலங்கை நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்குத் தட்டெழுத்தாளர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் எதிர்வரும் யூலை மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் த.பெ. இல. 1503 கொழும்பு-1 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இம்மாத 24ம் திகதிய வர்த்தமானியை பார்க்கவும்.

162

பலருடைய வேண்டுகோளின்படி 'வரதர்' எழுதும் பாரதக் கதையில் முன்கதைச் சுருக்கம் இந்த இதழில் வெளிவந்துள்ளது.

புதினம் 01 07 94 விற்பனையாகிறது

(ஏ-4182)

உ
சிவமயம்

நல்லூர்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மாள் தேவஸ்தானம்

23-06-94 முதல் 01-07-94 வரை
ஆலய முன்றலில்
"தேவி மகாத்மியம்"
என்னும் பொருளில்
தொடர் சொற்பெருக்காற்றிய
தமிழருவி
★ **திரு. த. சிவகுமாரன்** ★
அவர்களுக்கு
இன்று வெள்ளிக்கிழமை இரவு 9-00 மணிக்கு
அவ்வூர் மக்களால்
பட்டமளித்து,
பொன்னாடை போர்த்தி,
பதக்கமளித்து
கௌரவிக்கப்படவுள்ளார்

(இ-1110)

எழுபது அகவையிலும் ஏற்றம்பெற வாழ்த்துகிறோம் ! !

மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கம்
அமைத்து (1942)
அதன் ஊடாக மறுமலர்ச்சி சஞ்சிகை
வெளியிட்டு எழுத்தாளர்
பரம்பரையொன்றை உருவாக்கியவர்
"வரதர்".
"அறிவுக் களஞ்சியம்" — "புதினம்" —
"வரதர் கதை மலர்" என
வெளியீடுகளை வெளியிட்டு
இலக்கியப் பணிக்காக தன்னை அர்ப்பணித்து
50 ஆண்டுகளுக்கு மேலாக
பணிபுரிந்து வரும் மூத்த எழுத்தாளர்
திரு. தி. ச. வரதராஜன் "வரதர்"
அவர்களின் வாழ்வில் எழுபதைக் கடந்து
இன்றைய தினம் எழுபத்தொன்றில்
கால் பதிக்கும் நன்னாளை
நெஞ்சங்கள் வாழ்த்துகின்றன.
தங்கள் வாழ்வும் வளமும் நலம்பெற
இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்;

ஆனந்தா அச்சகம் -
அறிவுக் களஞ்சியம் - புதினம் -
வரதர் கதைமலர்
எழுத்தாளர்கள், பணியாளர்கள்.

01-07-94. (ஏ-4180)

கரும்புலிகள் தின கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் யூலை 5 ஆம் திகதி இடம்பெறும் கரும்புலிகள் தினத்தையொட்டி இன்று முதலாம் திகதி அதிபர்கள், ஆசிரியர்கள் க. பொ. த. உயர் வகுப்பு மாணவர்கள், சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு நடாத்தும் கருத்தரங்குகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ். வைத்தீஸ்வரா மத்திய மகாவித்தியாலயத்திலும் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம)

வேட்பாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

இம்முறைத்தேர்தலில் படித்த இளம் சமுதாயத்தினர்போட்டியிடவுள்ளதாக அரசியல் கட்சிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இன்னும் ஓரிரு தினங்களில் வேட்பாளர் தெரிவை அரசியல் கட்சிகள் பூர்த்தி செய்யும் என்றும் மேலும் அறியப்படுகிறது. (ம-இ)

ஸ்ரீமாவோ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக நாடு திரும்புகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

இன்று கொழும்பில் அவரது இல்லத்தில் அவரது தலைமையின்கீழ் அவசரக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் சம்பந்தமான இறுதி முடிவு இன்று நடைபெறும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும்.

இதேவேளையில் நேற்று திருமதி சந்திரிகா குமாரணதுங்க தலைமையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் தமக்குத் திருப்தியளிக்கவில்லையெனவும் ஸ்ரீ. ல. சு. கட்சியிலொரு முக்கிய அங்கத்தவரும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவருமான தினேஷ் குணவர்த்தனாவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இன்று நாடு திரும்பும் திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இந்த வேறுபாடுகள் நீங்கி நல்ல முடிவுகள் எடுக்கப்படுமென தான் நம்புவதாகவும் திரு. குணவர்த்தனா மேலும் தெரிவித்துள்ளார். இ

16-வது ஆண்டு நினைவஞ்சலி

* * *

நல்லூர் செட்டித் தெருவைச் சேர்ந்தவரும்
மானிப்பாயில் வசித்தவருமாகிய

டாக்டர் சரவணமுத்து
சோமசுந்தரம் அவர்கள்

(இளைப்பாறிய முன்னாள் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, R. M. P.)

தோற்றம் : 02-11-1912
மறைவு : 27-07-1978

அன்பிற்கு இலக்கணமாய்
ஆண்டவன் அடியவனாய்
இல்லத்திற்கு சுடரொளியாய்
ஈகையில் சிறந்தவராய்
உத்தமத்தில் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது;

பிரிவால் வாடும் :
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

Dr. சோ. சுந்தரராஜன்;
"கிருஷ்ணா",
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(இ-1108)

"எங்கள் மண்ணுக்காக போர் தொடுப்போம்
எங்கள் மண் வளம் காக்க மரங்களை நாட்டுவோம்"

நூலகம்.

மணிவாக்கு

வினைப் பயனிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. முற்பகலில் செய்கின்ற வினையின் விளைவு பிற்பகலில் வந்தே தீரும்.

- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்

நமது நோக்கு

அமெரிக்க இராஜதந்திரம்!

வடகொரியா, தென்கொரியா நாடுகளின் ஜனாதிபதிகள் ஜூலை 25ல் கூடிப் பேச இருக்கிறார்கள். 1945க்குப்பின் இரு நாடுகளின் தலைவர்களையும் சந்திக்கவைத்தது அமெரிக்க இராஜதந்திரத்திற்கு ஓர் வெற்றி.

வடகொரிய அணுஆயுதப் பரிசோதனை ஒன்றைத் தடுக்க அமெரிக்கா போர் மிரட்டலை வெளியிட்டது. தென்கொரியாவிற்கு ஆயுதத் தளபாடங்களை அனுப்பியது.

வடகொரியாவிற்போர் ஆரம்பித்து, தென் ஆசியப் பகுதி யுத்தகளமாக மாறிவிடும் என எதிர்பார்த்த வேளையில் —

முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் வந்து சேர்ந்திருக்கிறார்; பேச்சுவார்த்தை நடாத்தி வடகொரியாவை வழிக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

அதுமாத்திரமல்ல — 1993 நவம்பரில் ஐரோப்பிய நாடுகள் 'காற்' (GATT) ஒப்பந்தத்தை ஏற்கச் செய்ய அமெரிக்க இராஜதந்திர முயற்சி என்னவாயிருந்தது?

ஆசிய பசுபிக் பொருளாதார மாநாடு (APEC) கூட்டப்பட்டது.

அத்துடன் — பொஸ்னிய முஸ்லீம்களின் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த ஐரோப்பிய நாடுகள் பின்னடித்துக் கொண்டிருந்தன. அமெரிக்காவும் அதற்குத் துணைபோனது.

அதனால், மலேசியப் பிரதமர் மஹதீர் மொஹமட் ஆசிய பசுபிக் மாநாட்டைப் புறக்கணித்து அமெரிக்காவிற்குப் பாடம் புகட்டினார்.

சில காலங்களுக்கு முன் — பிரதமர் மஹதீர் அமெரிக்கா சென்றிருந்தார். வரவேற்பைக் காரணம் காட்ட வேண்டுமென்ற ரீதியில், புறக்கணிப்பை புறக்கணிப்பால் பாடம் படிப்பிக்க வேண்டுமென்ற ரீதியில் அமெரிக்க இராஜதந்திரம் அமையவில்லை.

மஹதீருக்குச் செங்கம்பள வரவேற்புக் கிடைத்தது. அதிபர் கிளின்டன் நேரில் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

போருக்கு வேண்டிய வசதிகளிருந்தும் அமைதித் தீர்வைக் காணும் அமெரிக்காவின் போக்கை, தென்னிலங்கைத் தலைவர்கள் உணர வேண்டும்.

இன்று — அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளதுபற்றிப் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

ஏற்கெனவே நலிவுற்ற தமிழினத்திற்கு மேலும் அழுத்தங்கள் போடாது, அமைதித் தீர்வுக்கு வழி வகுக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறோம்!

★ போதைவஸ்து பாவனை

உலக கிண்ண போட்டியிலிருந்து மரடோனா நீக்கப்படும் சூழ்நிலை

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

ஆர்ஜன்ரீனா நாட்டின் உதைபந்தாட்டக் குழுத் தலைவர் மரடோனா மீது நடைபெற்ற போதைவஸ்துப் பாவனை பரிசோதனையின்போது அவர் போதைவஸ்துப் பாவித்தார் என்பதற்கான அறிகுறி தென்பட்டதால் அவர் உதைபந்தாட்ட நிகழ்வுகளில் பங்குபற்றுவதைத் தடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடந்து கொண்டிருக்கும் உலக கோப்பைக்கான உதைபந்தாட்டப் போட்டி வரிசையில் கடந்த சனிக்கிழமை நைஜீரியாவை எதிர்த்து ஆர்ஜன்டீனா விளையாடியது. இப்போட்டியின் போது ஆர்ஜன்ரீனா அணித் தலைவர் மரடோனா மீது மேற்படி பரிசோதனை நடைபெற்றது.

அவர்மீது இப்போது இரண்டாவது முறையாக போதைவஸ்துப் பாவனை பரிசோதனை இடம்பெறுகிறது. இது நிரூபிக்கப்பட்டால் அவர் விளையாட்டுப் போட்டியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவது நிச்சயமாகிவிடும்.

மரடோனா முன்னரும் போதைவஸ்துப் பாவித்த குற்றச்சாட்டின் பேரில் 15 மாதங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டு கடந்த வருடந்தான் அந்தத் தடை நீக்கப்பட்டது.

இப்போதைய இரண்டாவது பரிசோதனையிலும் அவர் போதைவஸ்துப் பாவித்தது உறுதிப்படுத்தப்படுமாயின், மரடோனா உலக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வரிசையில் மூன்றாவது முறையாகத் தண்டனை பெறும் நபராக இடம்பெறுவார். —ரொ-ி

ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளுக்கான கீழைத்தேச சங்கீத, நடன மற்றும் சித்திரக்கலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ். மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் யாழ் வலயம் 01 கல்வித்திணைக்களத்தில் கிடைக்கப்பெற்று தபாலில் இடப்பட்டுள்ளது. இன்று 1ம் திகதி வரை கிடைக்கப் பெறாதவர்கள் வலயம் 1 கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். -ி

புதிய வேட்பாளரை ஐ.தே.க. நிறுத்தும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கென ஐக்கிய தேசியக் கட்சி புதியவர்களை வேட்பாளர்களாக நிறுத்தவுள்ளது.

ஐ. தே. க.வின் உள்ள பழைய உறுப்பினர்களை ஓரம் கட்டுவிக்காமலே கட்சி புதியவர்களுக்கு இடம் கொடுக்கவுள்ளதாகத் தெரிகிறது. இ-வ

கடல் தடையை நீக்குக இல்லையேல் நிவாரணம் தருக

(யாழ்ப்பாணம்)

கடல் வலய தடைச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் இல்லையேல் இதற்கு மாற்றீடாக நிவாரணம் வழங்க வேண்டுமெனவும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் ஒன்றியம் யாழ். அரச அதிபரை கோரியுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டம் கடந்த 28ம் திகதி யாழ். அரச அதிபர் திரு.கே. மாணிக்கவாசகர் தலைமையில் கூடிய போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தவிர கடற்றொழிலில் ஈடுபடுபவர்களுக்கு வேண்டிய முக்கிய உபகரணங்களான வலை மற்றும் உதிரிப்பாகங்களைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (162 - வி)

இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் கருத்தரங்கில் இன்று வெள்ளிக்கிழமை ''பக்தி கலை'' என்னும் தலைப்பில் ஆசிரியர் க. நவரத்தினம் சொற்பொழிவாற்றுவார். (வ)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி நடாத்தும் ஆங்கில தின விழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

இவ்விழாவில் அரசவியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். (162)

0 0

(யாழ்ப்பாணம்)

மூத்த எழுத்தாளர் 'வரதர்' அவர்களது ஐம்பதாண்டு இலக்கியப் பணியைக் கௌரவிக்கும் முகமாக இலக்கிய நிகழ்வும், விருந்துபசாரமும் இன்றிரவு கண்டுக்குளி குறுக்கு ஒழுங்கையிலுள்ள எஸ். பாலசுந்தரம் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வை இலக்கிய நண்பர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (எஸ்)

பலதும் பத்தும்

அவர்கள் தீர்மானம்-1

இடம்:- மேற்கு ஜாவா.

கூடியோர்:- விவசாயப் பெண்மணிகள்.

தீர்மானம்:- பாம்புகளைக் கொல்வோருக்கு தண்டனை. பத்து நாட்களுக்கு கட்டாய பொது வேலை.

காரணம்:- நெல் வயல்களில் எலிகளின் தொல்லை அதிகரித்துவிட்டனவாம். அந்த எலிகளை இயற்கையாகவே பிடித்தழிக்கும் பாம்புகள் விவசாயிகளின் நண்பர்கள்.

சூழலியல் (Ecology) அறிஞர்களுக்குப் புரிகிறது சூழலைச் சீண்டாது இணைந்து வாழ முனைந்திருக்கிறார்கள்.

—மயூரன்

இராசி பலன்

01 07 1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 17)

அஷ்டமி பி. ப 4-55வரை உத்தரட்டாதி காலை 7-27 வரை, சித்தாமிர்தயோகம். இராகுகாலம் காலை 10-26 முதல் 11-56 வரை, சுப நேரம், காலை 5-56 முதல் 7-26 வரை.

மேஷம்: தொழில் வளம், தைரியக்குறைவு, உறவினர் தொல்லை,

இடபம்: எதிர்பாராத திருப்பம், மன உற்சாகம், பணப்புழக்கம்.

மிதுனம்: கடுமையான உழைப்பு, கருத்து மோதல், பயண அனுகூலம்.

கடகம்: கிருசனம். குடும்ப வேற்றுமை, வேண்டாத பொறுப்பு.

சிங்கம்: தொழில் நஷ்டம், அமைதிக்குறைவு, அஜீரண கோளாறு.

கன்னி: தெளிவான முடிவு, காரியசித்தி, சகாயமணி.

துலாம்: எதிர்ப்பைச் சமாளித்தல், கடன்வரவு, சுபகாரிய செலவு.

விருச்சிகம்: மனைவி துன்பம், வருமானக்குறைவு, புத்தி சலனம்.

தனுசு: தொழில் பகை, வாக்குவாதம், நம்பிக்கையீனம்.

மகரம்: எதிர்பாராத நன்மை, சகோதர உதவி, விஞ்ஞானம்.

கும்பம்- மறைமுக சூழ்ச்சி, இனசன விரோதம், அச்சம்.

மீனம்- பெரியோர் அறிவுரை, தனவரவு, விருந்துபசாரம்.

ஜோஸ்யர்

விறகுக் காலைகளில் பழைய றாத்தல் படிகள்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அநேகமான தனியார் விறகு காலைகளில் பழைய றாத்தல் படிகளே இன்றும் பாவிக்கப்படுகின்றன.

இச்சட்ட விரோத நடவடிக்கைகளை கண்டுபிடிக்கப் பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். செயலக அளவைகள், நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. ஏ. நாகலிங்கம் எச்சரித்துள்ளார்.

இப்பகுதியில் விறகு காலைகளில் பயன்படுத்தப்படும் படிகள், தராசுகளுக்குக் கட்டாயம் முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் யாழ் நகரில் விறகு காலை உரிமையாளர்கள் எவரும் இன்னும் தமது தராசு படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளவில்லை என்றும் விறகு காலைகள் யாவற்றிலும் கிலோகிராம் படிகளையே பாவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (154-வி)

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-07-01 வெள்ளி இரவு

8-01 கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி ''கரும்புலிகள் களமாடும் தேசம் இது''
8-20 எழுச்சி கீதங்கள்
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம் ''இறக்கு திமோசரை உலகம் மறந்து விடுமா''
8-50 வாத்திய கானங்கள்

1994-07-02 சனி காலை

7-02 காலை வணக்கம்.
7-15 நீங்கள் கேட்டவை.
7-30 செய்திகள்.
7-35 பத்திரிகைச் செய்திகள்.
7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

யாழ். அரச அதிபருக்கு பரீட்சார்த்திகள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

கல்வி எழுதுவினைஞருக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்குமான ஆட்சேர்ப்பு குறித்து சில விளக்கங்களைப் பெறும் பொருட்டு யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தங்களால் விளம்பரப்படுத்தப்பட்டு மேற்படி பதவிகளிற்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொதுப் போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டது. அப்போட்டிப் பரீட்சையில் திறமையின் அடிப்படையில் சித்தியடைந்தவர்களிற்கு நியமனங்கள் வழங்குவதற்காக தங்களால் சிலருக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதாக அறிகின்றோம். இதுகுறித்து எமக்குப் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதற்கு முன்பு பரீட்சைத் திணைக்களத்தினால் இத்தகைய பதவிகளை வழங்குவதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளிற்கு பரீட்சை முடிவுகள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படும். அதில் பரீட்சார்த்தி பெற்ற புள்ளி, மாவட்ட அடிப்படையில் அவரது நிலை என்பன குறிக்கப்பட்டிருக்கும். பின்னர் அப்பதவிகளிற்குரிய வெட்டுப்புள்ளிகள் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பகிரங்கப்படுத்தப்படும். ஆனால் மேற்படி பதவிகளுக்கான நியமன நடைமுறையில் மேற்கூறப்பட்ட விடயங்கள் எதுவும் பின்பற்றப்படவில்லை.

மேலும் தெரிவு செய்யப்பட்டோருக்குக்கூட அவர்கள் பெற்ற புள்ளிகளோ மாவட்ட நிலையோ அறிவிக்கப்படவில்லை. இவ்விடயத்தை தாங்கள் எமக்குப் பகிரங்கமாகத் தெளிவுபடுத்த வேண்டும் எனக் கோருகின்றோம். மேலும் தங்களாலேயே பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. -வி

சீதனம் இன்றேல் திருமணம் இல்லை என்னும் வேதனை வாழ்வை வேரோடு சாய்ப்போம்

★ உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

2-வது சுற்றில் விளையாட சவூதி-நெதர்லாந்து தகுதி

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

உலகக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றில் விளையாட சவூதி அரேபியாவும் நெதர்லாந்தும் தகுதிபெற்றுள்ளன.

இந்த இரு அணிகளும் நேற்று முன்தினம் 'F' பிரிவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றன. சவூதிஅரேபியா- பெல்ஜியத்தை 1-0 என்ற கோல் கணக்கிலும் நெதர்லாந்து- மொரோக்கோவை 2-1 என்ற கோல் கணக்கிலும் வென்றன.

பெல்ஜியம், நெதர்லாந்து சவூதி சவூதி அரேபியா தலா 6 புள்ளிகளைப்பெற்றன. சவூதி அரேபியாவை வென்றதால் நெதர்லாந்து இந்த பிரிவில் முன்னணியில் உள்ளது. சவூதி அரேபியா 2வது இடத்தையும் பெல்ஜியம் 3வது இடத்தையும் பெற்றுள்ளன.

முதல் சுற்றுப் போட்டிகள் நேற்று முடிவடைந்தன. 2வது சுற்றுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன. இதில் 16 அணிகள் பங்குபற்றுகின்றன. 6 பிரிவுகளிலும் இருந்து இரு அணிகளும் 3வது இடத்தை வகிக்கும் 4 சிறந்த அணிகளும் இதில் பங்குபற்றுகின்றன. வி-இ

துன்பப்படும் மக்களுக்கே நாம் ஆதரவுவழங்குகிறோம்!

யாழ். ஆயர் பி.பி.ஸி.க்கு பேட்டி

(யாழ்ப்பாணம்)

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு பல ஆண்டுகளாக மனித சுதந்திரங்கள் மறுக்கப்பட்டிருக்கும் மக்களுக்கே நாம் ஆதரவு வழங்குகிறோம். யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் யாழ் நகருக்கு அண்மையில் விஜயம் செய்த பி.பி.ஸி. நிருபருக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பி வருகிறார்கள். இதனால் நாம் அவர்கள் பக்கம் என்று கூறினாலும் அதுவும் மக்களுக்காகத்தான்.

நாங்கள் விடுதலைப் புலிகளின் பக்கமோ அல்லது வேறு எந்த இயக்கத்தின் பக்கமோ இல்லை. துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் அடக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட நீண்டகாலம் அரசின் ரீதியில் ஒதுக்கப்பட்ட மக்கள் பக்கமே நாங்கள் இருக்கிறோம் என்று ஆயர் அவர்கள் தெரிவித்தார். வி-இ

5600 அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து வந்தன

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வந்து சேர்ந்த 5600 தேசிய அடையாள அட்டைகள் யாழ் செயலகத்திலுள்ள ஆட்பதிவுத் திணைக்களப் பிரிவின் ஊடாக உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ் அரச அதிபர் விசேட ஒழுங்குகளின் மூலம் இவை வந்து சேர்ந்துள்ள இவ் அடையாள அட்டைகளில் 3000 புதிய அடையாள அட்டைகளும், 72/73ம் ஆண்டுகளுக்கான புதுப்பித்த 2000 அடையாள அட்டைகளும் தொலைந்த அடையாள அட்டைக்குப் பதிலாக விண்ணப்பம் செய்தவர்களின் 600 அடையாள அட்டைகளும் வந்திருந்தன. இ71

சான்றிதழ் புத்தகங்கள் வந்தன

(மானிப்பாய்)

கிராமசேவையாளர்களினால் வழங்கப்படும் நற்சாட்சிப்பத்திர சான்றிதழ் (ஜி ஒ எம் 3) புத்தகங்கள் கொழும்பிலிருந்து யாழ் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. 71

நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யூலை 5ம் திகதி கரும்புலிகள் தினம் ஆகையால் யூலை முதலாம் வாரத்திற்கும், யூலை 4, 5-ம் திகதிகளிலும் "நரோமா" கப்பலில் பயணம் செய்ய பணம் செலுத்தியவர்களை யூலை 6-ம் திகதி அனுப்பும் முகமாக, "நரோமா" கப்பல் 6-ம் திகதி காலை பருத்தித்துறை இறங்குதுறைக்கு அனுப்பி வைக்கப்படுமென யாழ். அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான இறுதி முடிவு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் இங்கிருந்து நரோமா புறப்படும் திகதி பற்றிய அறிவித்தல் பத்திரிகை மூலம் வெளியிடப்படும் எனவும் அறிவித்துள்ளார். —162-இ

பரீட்சை நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை இரண்டாம் திகதி யாழ் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள சங்கீத, நடன, சித்திரக்கலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை மண்டபங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளது என்று யாழ் வலயம் 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சங்கீத ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், நடன ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ் கன்னியர்மடம் மகா வித்தியாலய மண்டபம் 1, சித்திரக்கலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ் கன்னியர்மடம் மகாவித்தியாலய மண்டபம் 2. -இ

திருமலையில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டார்கள்.

இத்தாக்குதலை முறியடிப்பதற்காக [illegible] விமானப்படை முகாமிலிருந்து புக்காரா மற்றும் ஹெலிகொப்டர் உதவியுடனும் கவச வாகனங்களுடன் வந்த விமானப்படையின் மற்றுமொரு அணிமீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போதே விமானப்படைச் சிப்பாய் ஒருவர் பலியானார். இதில் பலர் காயமடைந்தனர்.

ஆயுதங்கள் மீட்பு

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் விமானப்படையினரிடமிருந்து ரி-81 ரக துப்பாக்கி-1, அதற்குரிய ரவைக் கூடுகள்-8, நடுத்தர ரவைகள் 260, ஏ. கே. ரவைக்கூடு தாங்கி அணி-1, மழைக் கவசம்-1, துப்பாக்கி எறிகணை 2 தண்ணீர் தாங்கி கூடு 1 போன்ற ஆயுதங்களை கைப்பற்றினர்கள்.

இத்தாக்குதலில் புலிகளின் தரப்பில் மேஜர் கலைக்குமார் [illegible] எழில் நிலவன் (நாகராஜ் தர்மராஜ்- திருமலை) லெப். பார்த்திபன் (கணபதிப்பிள்ளை [illegible]- திருமலை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். வி

முக்கிய கட்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளர் டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மகாஜன எக்சத் பெரமுன தேர்தலில் வேட்பாளர்களை தெரிவு செய்யும் முறையில் ஈடுபட்டு வருவதாகவும் அக்கட்சி பிரமுகர்கள் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. —க-இ

சஜித்

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

வும் அறியப்படுகிறது.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விடுத்த அழைப்பை சஜித் பிரேமதாசவும் அவரது தாயார் ஹேமா பிரேமதாசவும் ஏற்கனவே நிராகரித்தது தெரிந்ததே. —க-இ

கரும்புலிகள்

எழுச்சிக் குடியிருப்பு திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் எழுச்சிக் குடியிருப்பு திறப்பு விழா இன்று மாலை 4-30 மணிக்கு வடமராட்சி கோட்ட துணை அரசியல் பொறுப்பாளர் திரு தவா தலைமையில் கரணவாய் மேற்கு கல்லடைப் புளியடி திடலில் நடைபெறவுள்ளது.

மாலை 7-30மணிக்கு பொதுக் கூட்டமும் பின்னர் நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில்

போட்டியிடுவது பற்றி கூட்டணி ஆராயும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்ட தேர்தல் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து வருவதாக திரு. மு.சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்-

இதேவேளை வன்னி, திருமலை, திகாமடுல்ல, மட்டக்களப்பு பகுதிகளில் கூட்டணி போட்டியிடவுள்ளதாகவும் கட்சி தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது. க

ஷெல் தாக்குதலில் மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொண்ட தாக்குதலில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். மீன்பிடி உபகரணங்கள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

காங்கேசன்துறையிலிருந்து நீருந்து விசைப்படகு மூலம் வந்த கடற்படையினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளையில் காரைநகர் பகுதியிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. —க

வாக்களிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் ஒரு வாக்காளர் தாம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பிரதேசத்தில் தமது வாக்கை அளிக்க முடியாதுள்ளது என்பதை நியாயமான முறையில் தெரிவிக்கும் பட்சத்தில் வேறு ஒரு வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைப்பதிவு செய்யமுடியும்.

இதற்கான விண்ணப்ப படிவங்களை சகல மாவட்ட செயலகங்களிலும், கச்சேரிகளிலும் தேர்தல் அலுவலகங்களிலும், பிரதேச அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 4ம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணையாளர் செயலகத்துக்கு அனுப்பவேண்டும் என்று கூறினார். வி-இ

தேர்தலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளை எதிர்நோக்கியுள்ளன.

இதனால் இரண்டு கட்சிகளுக்குள் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. கட்சித்தாவல் இந்த நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

இரு கட்சிகளும் எதிர்க்கட்சியிலிருந்து தமது கட்சிக்கும் சேர்ந்துகொண்ட உறுப்பினர்களுக்கு தேர்தலில் போட்டியிட முக்கிய இடம் அளித்துள்ளன.

இது கட்சிக்குள்ளிருக்கும் ஏனைய அங்கத்தவர்களை பெரும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. மேலும் புதியவர்கள் பலருக்கு இடமளிப்பதால் கட்சியின் பழைய அங்கத்தவர்கள் பலர் ஓரங்கட்டப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த சிக்கல் காரணமாக ஆளும் ஐ. தே. க.வும் ஸ்ரீல. சு. கட்சியும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இ

பொலிஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கான காரணமெனக் கூறப்படுகின்றபோதிலும் சரியான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லையென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. க

ஐ. தே, க. உதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தே. க. அங்கத்தவராக சேர்ந்தார் எனவும் பல தேர்தல்களில் ஐ. தே. கவுக்கு பக்கபலமாக நின்று உழைத்து வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அவிசாவளையில் நடைபெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் தமக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் இத்தகைய கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என எச்சரிக்கை விடுத்தே தமக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாக திரு. வஸ்நாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு

தெரிவானமாணவர் கவனத்திற்கு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விரைவில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதேவேளையில், பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக 400 மாணவர்களை சேர்க்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படுவதாகவும் அறியப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தேர்தலில் போட்டி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கின் சகல பகுதிகளிலும் ஈ. பி. ஆர். எல் எவ். கட்சி போட்டியிடும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனிக்காக யாழ்ப்பாணம் [illegible] வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு யூலை மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number [illegible]